செய்தி வெளியீடு எண்: 552 நாள்:24.11.2016

<u>செய்தி வெளியீடு</u>

பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை வரவேற்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற திட்டம் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் டாக்டர்.V.சரோஜா அவர்களால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் 24.11.2016 அன்று காலை 10.00 மணியளவில் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 18 வயது நிறைவடைந்த 10 பயனாளிகளுக்கு ரூ.4,06,264/– (ரூபாய் நான்கு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு மட்டும்) முதிர்வு தொகையினை வழங்கினார்.

நாடு முழுவதும் மக்கள் விழிப்புணர்வு முகாம் நடத்தி இந்த குழந்தை பாலின விகித சரிவு என்ற பிரச்சனையை எதிர்கொண்டு தீர்வு காணவே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பாலின விகித சமநிலை அதிகளவு சீர்குலைந்த இந்தியாவிலுள்ள 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. அதில் தமிழ்நாட்டில் குழந்தை பாலின விகிதம் குறைவாகவுள்ள கடலூர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு 2016–17 நிதியாண்டில் ரூ.23,04,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குழந்தை பாலின விகிதத்தை சமன்படுத்திடவும், பெண் குழந்தையின் உயிர்பாதுகாப்பினை உறுதி செய்திடவும், பெண் கல்வியினை மேம்படுத்திடவும் துவக்கப்பட்ட திட்டமாகும்.

மேற்படி துவக்க விழாவில் அரசு செயலர், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, இயக்குநர், சமூகநல இயக்குநரகம், இயக்குநர், சமுகபாதுகாப்பு துறை, குழும இயக்குநர், தேசிய கிராம சுகாதார இயக்ககம், இயக்குநர், மருத்துவ பணித்துறை, இயக்குநர், களவிளம்பர துறை மற்றும் கலந்தறியதற்குரியவர், மத்தியஅரசு ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கருத்தரங்கில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, கடலூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், தேனி, சேலம், மற்றும் விழுப்புரம் ஆகிய 13 மாவட்டங்களிலிருந்து மாவட்ட சமூகநல அலுவலர்கள், மாவட்ட திட்ட அலுவலர்கள், மாவட்ட தாய்சேய் நல அலுவலர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் களவிளம்பர துறை அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், தொட்டில் குழந்தை திட்டம் போன்ற பல புதுமையான திட்டங்கள் தமிழ்நாட்டில் 1992ல் ஆரம்பிக்கப்பட்டு பெண் குழந்தைகள் சிறப்பாக வளர்க்கப்பட்டு வருகின்றனர். முதலமைச்சரின் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 654395 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் 4969 குழந்தைகள் மீட்கப்பட்டு தத்து நிறுவனங்கள் மூலம் தத்து கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குழந்தை திருமணத்தை முற்றிலும் ஒழித்திடும் நோக்கத்தில், குழந்தை திருமண தடைச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சமூகநல அலுவலர்கள், குழந்தை திருமண தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு அக்டோபர் 2016 வரை 4854 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இது போன்ற பல முன்னோடி திட்டங்களை சிறப்பாக செயல்டுத்தும் தமிழ்நாட்டில், பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை வரவேற்போம்(BETI BACHAO, BETI PADHAO) திட்டமும் தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அரசு உயரதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் வாயிலாக சிறப்பு நிகழ்வுரைகள் 2 நாட்கள் நடத்தப்படவுள்ளது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**